4. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/70).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 18/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 18/70)

***மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதாவை * (சட்டப் பேரவை மசோதா எண் 18/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மசோதாவைப் பரிசீலனை செய்வதற்காக முன்மொழிகையில் இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை குறுகிய கால அளவுக்கு நீட்டிக்க விழையும் ஒரு சாதாரண மசோதா இதுவெனக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) சட்டம் (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது.) 30—9—1970 அன்று செல்திறனற்றுப் போகும். 1960-ஆம்

---

* 25—8—1970 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.